**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 261/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W–4 |
| Name | : | ஆறுமுகம், வயது 47 |
| Father Name/Husband Name | : | செந்தூர்பாண்டி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of August 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். 05.04.2022 ஆம் தேதி காலை 07.45 மணியளவில் போலீசார் செண்பா நகர் மூன்றாம் தெருவில் விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நான் முதலாவதாக கையெழுத்து செய்தேன். **அந்த பார்வை மகஜர் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. நீங்கள் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு படிக்கத் தெரியாது.எந்த வழக்கு சம்பந்தமாக கையெழுத்து போடச் சொன்னார்கள் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். நீங்கள் கையெழுத்து போட்ட பேப்பரில் எத்தனை

பக்கங்கள் எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. நீங்கள் சொன்ன நாள் நேரத்தில் சம்பவ இடத்தில் வைத்து நீங்கள் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அசா.1 ம் நீங்களும் ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.